பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

பட்டுச் சேலைகளின் சோலையாகத் திகழும் ஒரே இடம்!

இளவரசி

சேலைச் சோலை

57, சிறப்பு அங்காடி, (உள்ளகம்) யாழ்ப்பாணம். [சி-9729]

# உதயன்

விலை ரூபா 5-00

கல்யாண, முகூர்த்தப் பட்டுப் புடவைகளுக்கு கைராசியான இடம்

இளவரசி

சேலைச் சோலை

57, சிறப்பு அங்காடி, (உள்ளகம்) யாழ்ப்பாணம். [சி-9729]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 30 செவ்வாய்க்கிழமை (13 - 06 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 198

# அடுத்தடுத்த குண்டுவெடிப்புக்களால் கொழும்பு நகரில் வர்த்தகம் மந்தம்!

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 13

கடும் காற்று, கடற் கொந்தளிப்பு காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த கிளாலி - பூநகரி படகுச்சேவை மீண்டும் இன்றுமுதல் ஆரம்பமாக உள்ளது.

படகுச்சேவை இன்றுமுதல் வழமையான ஒழுங்கின்படி வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர். [ஐ]

## இன வன்செயல் நடக்க இடமளிக்க வேண்டாம்

### அரச எம். பிக்களுக்கு உத்தரவு

கொழும்பு, ஜூன் 13

தமிழர்களுக்கு எதிராக இன வன்செயல்களைத் தூண்டும் விதத்தில் எதிரணியினர் செயற்படுவாதகவும். —

அவர்களின் செயல்களை முறியடிக்கும் விதத்தில் எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். —

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் — அரசாங்கத் தலைமைப்பீடம் கேட்டுள்ளது.

இனக்கலவரம் ஒன்று ஏற்பட்டால், அரசு இதுவரை இன ஒற்றுமையைப் பேணுவது சம்பந்தமாக வெளிநாடுகளில் மேற்கொண்ட பிரசாரம் மூலம் ஈட்டிக் கொண்ட நன்மதிப்பு சுக்குநூறாகி விடும். எனவே இனக்கலவரம் ஒன்றைத் தூண்டி விடுவதற்கு எதிர்க்கட்சியினர் எடுக்கும் முயற்சிகளை முறியடிப்பதற்கு அரச எம். பிக்கள் தீவிரமாக உழைக்க வேண்டும்.— என்று அரசாங்க உயர்மட்டம் உத்தரவிட்டுள்ளது. [அ-3]

## வெளி மாவட்டங்களில் இருந்து தலைநகர் வருவதற்கு அச்சம்

கொழும்பு, ஜூன் 13

கொழும்பு நகரில் கடந்த வாரத்தில் அடிக்கடி நடைபெற்ற குண்டு வெடிப்புகளால் வர்த்தகம் மந்த நிலைக்கு வந்துள்ளதாக வர்த்தக வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்சிகள் தகவல் வெளியிட்டுள்ளன.

தலைநகரில் ஆறு நாள்களில் நான்கு தடவைகள் குண்டு வெடிப்புகள் இடம்பெற்று —

எந்த வேளையிலும் எந்த இடத்திலும் குண்டு வெடிக்கலாம் என்று மக்கள் பீதி அடைந்துள்ளதால் —

இங்கு வர்த்தகம் களை இழந்து மந்த நிலைக்கு வந்திருப்பதாக — வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புதிய பதற்ற நிலையினால் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த வர்த்தகர்கள் கொழும்பு வருவதற்கு தயக்கம் காட்டுவதும் வர்த்தகம் குன்றிப் போவதற்குக் காரணம் என்று செய்தி ஏஜென்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

கடந்த திங்கட்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையத்தடியில் வாகனம் ஒன்றில் வைக்கப்பட்ட குண்டு வெடித்த பின்னர்—

கொழும்பில் அடுத்தடுத்து நான்கு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்று விட்டன.

அதனால் இங்கு மக்கள் மத்தியில் பெரும் பதற்றமும் பீதியும் ஏற்பட்டுள்ளன.

வாகனங்கள், வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள், வீதிகள் என்று எங்கும் எப்போதும் குண்டு வெடிக்கலாம் என்று மக்கள் அஞ்சுகின்றனர்.

அதனால் மக்கள் போக்குவரத்துக்களை மிக அவசியத் தேவைகளுக்கு மட்டுமே என்று கட்டுப்படுத்தி உள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் 5 தமிழர் படையினரால் படுகொலை

யாழ்ப்பாணம், ஜூன் 13

மட்டக்களப்பில் அண்மையில் நடந்த வெவ்வேறு சம்பவங்களில் தமிழ் பொதுமக்கள் ஐந்து பேர் படையினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழனன்று காயங்கேணி என்னும் இடத்தில் விறகு வெட்டச் சென்ற தமிழர் ஒருவரை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

பின்னர் அவரது சடலத்தை கண்டதுண்டமாக வெட்டி உழவு இயந்திரம் ஒன்றில் எடுத்துச் சென்ற இராணுவத்தினர் அதனை எரித்துள்ளனர்.

மகிழடித்தீவைச் சேர்ந்த குடும்பஸ்தரான பொன்னம்பலம் சிறி [வயது 28] என்பவர் கடந்த 8 ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அன்றைய தினம் ஏறாவூர் பகுதியில் மற்றொரு தமிழர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தலதா மாளிகையை தாக்கத் திட்டமாம்!

கொழும்பு, ஜூன் 13

பௌத்த மதத்தவர்களின் புனித வரலாற்றுத் தலங்களைத் தாக்க விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனராம்.

பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஜேர்மன் வானொலி இத்தகவலை வெளியிட்டது.

பௌத்தர்களின் புனித தலங்களான கண்டி தலதா மாளிகையையும், அனுராதபுரத்தில் உள்ள புனித மகா போதி விகாரையையும் தாக்குவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். [ஐ 3]

## தென் பகுதியில் நேற்று நடந்த 3 விபத்துச் சம்பவங்களில் 8 பேர் பலி; 68 பேர் காயம்

கொழும்பு, ஜூன் 13

தென்பகுதியில் நேற்று இடம்பெற்ற 3 வெவ்வேறு விபத்துச் சம்பவங்களில் 8 பேர் கொல்லப்பட்டனர். 68 பேர் வரையில் காயங்களுக்கு உள்ளாகினர்.

கொழும்பிலிருந்து கதிர்காமம் சென்று கொண்டிருந்த பஸ் ஹிக்கடுவ குமாரகந்த வளைவில் விபத்துக்குட்பட்டதில் ஒரு தமிழர் உட்பட 6 பேர் கொல்லப்பட்டனர் 52 பேர் வரையில் காயங்களுக்குள்ளாகினர்.

கொழும்பிலிருந்து கதிர்காமம் சென்று கொண்டிருந்த வேறொரு தனியார் பஸ் கொடகா வெலவில் பாதையிலிருந்து விலகி விபத்துக்குள்ளானது. இதன்போது 15 பேர் காயமடைந்தனர்.

துல்கிரியவில் இடம்பெற்ற 3ஆவது சம்பவத்தில் காபுல் லங்கா நிறுவன வாகனம் ஒன்று லொறி ஒன்றுடன் மோதியதில் லொறியில் சென்ற இருவர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயங்களுக்கு உள்ளானார்.

## ★ முகாம் மீது நேற்று புலிகள் பாய்ச்சல்

# மட்டக்களப்பில் 18 படையினர் பலி!

கொழும்பு, ஜூன் 13

மட்டக்களப்பில் காட்டுப் பகுதியில் உள்ள இராணுவ முகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடத்திய பெருந் தாக்குதலில் படையினர் தரப்பில் குறைந்தது 18 பேர் கொல்லப்பட்டனர்.

சிறு ரக பீரங்கிகள் மற்றும் கனரக ஆயுதங்கள் மூலம் புலிகள் இத்தாக்குதலை நடத்தியதாகவும் --

இரு தரப்பிலும் பலத்த சேதங்கள் ஏற்பட்டதாகவும் இராணுவ வட்டாரங்கள் நேற்று நள்ளிரவு தெரிவித்தன.

கடந்த இரண்டரை வார காலத்துக்குப் பின் விடுதலைப் புலிகள் இப்பகுதியில் நடத்திய மிகப்பெரிய தாக்குதல இதுவாகும் என்று பி.பி.ஸி. நேற்று நள்ளிரவு அறிவித்தது.

தாக்குதலில் கொல்லப்பட்ட 10 சிப்பாய்களின் சடலங்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும்—

கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கும் என்றும் பி.பி.ஸி. மேலும் தெரிவித்தது. (ஐ-4)

## விபத்துக்குள்ளான பஸ் வண்டியில் குண்டு வெடித்ததாக எழுந்த பீதி!

கொழும்பு, ஜூன். 13

கொழும்பில் இருந்து 60 மைல் தொலைவில் உள்ள ஹிக்கடுவவில் நேற்று விபத்துக்குள்ளான பஸ்ஸில் குண்டு வெடித்து விட்டதாக முதலில் வெளியான செய்திகளால் பெரும் பீதி ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் இருந்து கதிர்காமம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அந்தபஸ் ஹிக்கடுவவில் சாரதியின் கட்டுப்பாட்டை மீறி அப்பகுதியில் இருந்த கடை ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர். 58 பேர் காயமடைந்தனர்.

விபத்து நடைபெற்ற சிறிது நேரத்துக்கெல்லாம் பஸ்ஸில் குண்டு வெடித்து விட்டதாக அப்பகுதி எங்கும் தகவல் பரவியது.

பொலீஸார் உடனடியாக சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து விபத்துச் சம்பவம் என்பதை உறுதிப்படுத்தினர்.

பஸ்ஸில் குண்டு வெடித்ததாகப் பரவிய செய்திகள் முற்றிலும் தவறானவை என்று ஹிக்கடுவ பொலீஸ் நிலைய இன்ஸ்பெக்டர் ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த சில நாட்களாக சிறுகுண்டு வெடிப்புச் சம்பவங்கள் அடிக்கடி இடம் பெறுவதால் எங்கே

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஹபரண கப்பலில் இன்று மருந்து, மா வருகின்றன

### ஓய்வூதிய வவுச்சரும் வரும்

இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் 'ஹபரண' கப்பலில் யாழ். மாவட்ட ஆஸ்பத்திரிகளுக்கு தேவையான மருந்து வகைகள் எடுத்து வரப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரி உட்பட ஏனைய ஆஸ்பத்திரிகளுக்கு தேவையான 2 ஆம் கந்தாய மருந்து வகைகள் இம்பாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் ஒரு தொகுதி அடையாள அட்டைகள் போன்றவை எடுத்து வரப்படுகின்றன.

இதே வேளை — இக்கப்பலில் ஆயிரத்து 950 மெற்றிக்தொன் மாவும் எடுத்து வரப்படுகின்றது. (ஒ-3)

## புலிகளின் புலனாய்வு வளர்ச்சியே படையினர் தோல்விகளுக்கு காரணம்

### "சண்டே ரைம்ஸ்" பாதுகாப்பு செய்தியாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 13

விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறை வளர்ச்சியே இராணுவம் சந்தித்த தோல்விகளுக்கு காரணமாகும்.

— இவ்வாறு தெரிவித்திருக்கிறார் "சண்டே ரைம்ஸின்" பாதுகாப்புச் செய்தியாளர்.

அரச, இராணுவ புலனாய்வுப் பிரிவுகளைவிட புலிகளின் புலனாய்வுத்துறை அதிக வளர்ச்சி கண்டுள்ளது. —

விடுதலைப் புலிகளுக்கு எதையுமே மறைக்க முடியாது. இராணுவத்தின் செயற்பாடுகள் அனைத்துமே அவர்களுக்கு நன்கு தெரியும் —

பாதுகாப்புப் படையினர் இராணுவ நடவடிக்கைகளை திட்டமிடும் போது விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் விவேகமான மூளையையும் கவனத்தில் எடுக்க வேண்டும். என்றும்— பாதுகாப்புச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

## படைகளுக்கு ஆட்சேர்க்க அரசு மும்முரம்

கொழும்பு, ஜூன் 13

பொறியியல் பட்டாலியன்களுக்கும் மருத்துவ படையணிகளுக்கும் ஆட்களைச் சேர்க்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இம் மாதம் 20 ஆம் 21 ஆம் திகதிகளில் இதற்கான நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இதேவேளை 16 முகாம்களில் இராணுவ ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன. இம் மாதம் 26 ஆம் 27 ஆம் திகதிகளில் தொண்டர் படை பட்டாலியன்களில் ஆட்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஏவுகணை எதிர்ப்பு ஹெலிகள்

கொழும்பு, ஜூன் 13

ஏவுகணைகளை எதிர்கொண்டு அழிக்கும் ஹெலிக்கொப்டர்களை ரஷ்யாவிடம் இருந்து வாங்க ஸ்ரீலங்கா அரசு தீர்மானித்துள்ளது.

இத்தகைய ஹெலிக்கொப்டர்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாகப் பேச்சு நடத்த நிபுணர் குழு ஒன்று ஏற்கனவே ரஷ்யாவுக்குச் சென்றுள்ளது. (ஐ-4)

## 5 மைல்களுக்கு அப்பால் துறைமுகத்துக்கு வெளியே ஹபரண தரித்து நிற்கும்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நேற்று நண்பகலுக்கு பின்னர் காங்கேசன் துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்பட்ட ஹபரண கப்பல் துறைமுகத்துக்கு வெளியே 5 மைல் தூரத்திலேயே தரித்து நிற்கும் என யாழ்ப்பாணத்தில் தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலையில் இருந்து நேற்றுக் காலை பருத்தித்துறை நோக்கிப் புறப்பட இருந்த 'ஹபரண' கப்பல் நேற்று நண்பகலுக்கு பின்னர் காங்கேசன்துறைக்கு வந்து சேரும் என்றும் —

துறைமுகத்துக்கு வெளியே 5 மைல் தூரத்தில் அக்கப்பல் தரித்து நிற்கும் என்றும் —

தேவைப்படும் பட்சத்தில் அங்கு சென்று கடற்படையினர் கப்பலை சோதனையிட

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்திமுரளி



குண்டு வெடிக்குதோ... இல்லையோ... இப்படி [illegible] துக்கள் இனி அடிக்கடி [illegible] கும் என்டு சொல்லு[illegible]...!

## காட்டுப்பகுதியில் மற்றொரு படை முகாம் மூடப்பட்டது!

யாழ்ப்பாணம், ஜூன் 13

மட்டக்களப்பு மாவட்டத்தில் மற்றொரு இராணுவ முகாம் மூடப்பட்டுள்ளது.

மாவடி ஓடைப்பகுதியில் காட்டுப் புறமாக அமைந்திருந்த முகாமே கடந்த வியாழனன்று மூடப்பட்டது.

இங்கு தங்கியிருந்த இராணுவத்தினர் இலுப்பையடிச்சேனை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் புதிதாக முகாம் அமைத்துத் தங்கியுள்ளனர்.

கிழக்கில் காட்டுப்பகுதியில் உள்ள படை முகாம்களின் [illegible] வரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதைக் கருத்திற்கொண்டு காட்டுப்புற முகாம்களை படையினர் [illegible].  (ஐ-4)

## எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சை

## அனுமதி அட்டைகள் இன்று விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 13

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறவுள்ள எழுதுவினைஞர் சேவைக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை அனுமதி அட்டைகள் இன்று பரீட்சார்த்திகளுக்கு தபால்மூலம் விநியோகிக்கப்படவுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அல்சேஷன் நாய் கூட்டுடன், கோழிக்கூடு, இரண்டு சில்லு ரயர் வண்டில், அலுமாரி, டிரெசிங் ரேபிள், கந்தோர்மேசை, சிங்கர் மெஷின் மற்றும் வீட்டுத் தளபாடங்கள். குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில், பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. [37043]

455 புதிய வீடியோ கமறா, M-100 வீடியோ கமறா, நிக்கோன் FM-2 ஸ்ரில் கமறா, கனோன் ஸ்ரில் கமறா. நீகல் வீடியோ, 13/1, கடற்கரை வீதி, ஊரிக்காடு... மோட்டை. (8579)

### தேவை

நல்ல நிலையிலுள்ள அவரி மேடைத்தராசு (5, அந்தர்) தேவைப்படுகின்றது. விற்பனை செய்ய விரும்புவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். சிவா நறுமணப்பூங்கா 288, கேணலிட்டு சாலை ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/1443)

### மனோரமா இயர் புக

1995 ஆம் ஆண்டிற்கான மனோரமா இயர் புக் வெளிவந்து விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. தமிழ் கம்பியூட்டர் ''மே'' மாத இதழ் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. இவ்விரண்டையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள பூபால சிங்கம், புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-1438]

### விசேஷ அன்ரனா

ரூபவாஹினி மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T.V. அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல் T.V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக்கொள்வதற்கு வினஸ் டிவ்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-1489]

### தவறிவிட்டது

9-6-95 அன்று சுந்தரலிங்கம் வாசுகியின் குடும்ப அட்டை, உணவு முத்திரை, குலசிங்கத்தின் மண்ணெண்ணெய் காட் ஆகியன கொக்குவில் றோட்டுக்கும் — திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர் தயவுசெய்து மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகிலுள்ள தேநீர் கடையில் (வேலணை) கையளிக்கவும். சன்மானம் தரப்படும். (37052)

## திருத்தி வாசிக்கவும்

இம் மாதம் 6 ஆம் திகதி உதயனில் வெளியான, ''யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பிற்குப் பதிவு செய்தல் — 1995'' என்ற விளம்பரத்தில்—

கலாநிதி (முதுமெய்யியல் மாணி) என்று இருப்பதை— (கலாநிதி, முதுமெய்யியல் மாணி) என்று திருத்தி வாசிக்கவும்.

## யாழ். வாசிக்கு முதல் தர சித்தி

யாழ்ப்பாணம், ஜூன் 13

ஐ. நா பல்கலைக்கழக கல்வித் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள பெங்களூர் விவேகானந்த கல்வி நிறுவனத்தில் பயிற்சி பெற்ற யாழ்ப்பாணத்தவர் முதல் பிரிவில் சித்தியடைந்துள்ளார்.

30 நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்கள் பங்குபற்றிய இந்தப் பயிற்சி நெறியில் யாழ்ப்பாணத்தில் இருந்து யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறை உதவி விரிவுரையாளர் மைக்கல் கொலின்ஸ்சும் பங்குபற்றினார்.

இவர் சகல பாடங்களிலும் 'ஏ' பெறுபேறுகள் பெற்று சிறப்புச் சித்தி பெற்றுள்ளார்.

## பலாக்கொட்டை சுட மூட்டிய தீயினால் விபரீதம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

பலாக்கொட்டை சுடுவதற்காக சிறுவர்கள் மூட்டிய தீயினால் வீடொன்று தீப்பற்றி முற்றாக எரிந்து சேதமடைந்தது.

அல்வாய் கிழக்கில் கடந்த சனிக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றது. [ஓ-15]

---

உ
தேவிமயம்

## பட்டம் வழங்கிக் கௌரவம்

அல்வாய் - வேவிலந்தையம்பதி
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய
மஹா கும்பாபிஷேகம் (12 - 06 - 95) திங்கள் நடைபெற்ற போது
கும்பாபிஷேக பிரதிஷ்டா குரு



ஊரெழு
சிவஸ்ரீ
**பால. வைத்தியநாத சிவாச்சாரியார்**
அவர்களுக்கு

மேற்படி ஆலய பரிபாலன சபை சார்பாகவும்,
அல்வாய் சைவப் பெருமக்கள் சார்பாகவும்

## சிவாகம கிரியா சூடாமணி

என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

— மேற்படி தேவஸ்தானம்.

[37056]

---

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



படைப்பு: 29 — 05 — 1968
அநியாய அழிப்பு: 13 — 06 — 1989

செல்வன்
**கிருஸ்ணபிள்ளை ஜெயானந்தன்**

மகனே நீ சென்று ஆறு ஆண்டு சென்றிடினும் மாறாது உன் பாசம்
பல ஆண்டு சென்றிடினும் மறவாது உன் நினைவு
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கும்.

— குடும்பத்தினர்.

ராஜ வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. [8577]

---

## நினைவலைகள்



**செல்வன் நடராஜா சசீந்திரன்**

எங்கள் குலம் விளங்க வந்த குல விளக்கே!
அழகுக்கோர் திருமகனாய், கல்விக்கோர் உருவமாய்
அன்புக்கோர் இருப்பிடமாய், நற்பண்புக்கும்
அமைதிக்கும் ஓர் இலக்கணமாய் நற்றவம்
செய்திட நானிலத்தோர் போற்றிட எங்கள்
குடும்பத்தின் தலைமகனாய் அணையாத சசிஜோதியாய்
வந்துதித்த மாசற்ற திரவியமே, பெற்றமனம் வெந்து
பித்தாய்க்கரைந் தோட அப்பா, அம்மா, அத்திமணி (மைத்துனி)
உடன் பிறவா சகோதரர்கள் உற்றார், நண்பர்கள்
எல்லோரும் உன்னை நித்தம் நித்தம் நினைந்து நெஞ்சு
நெக்குருக நீ பாசத்தை மறந்து எங்கு சென்றாயோ?
எட்டாண்டு சென்றிடினும் மாறாது உன் பாசம்
பல்லாண்டு சென்றிடினும் மறையாது உன் உருவம்
எங்கு சென்றாலும் இறைவனைப் பிராத்திக்கிறோம்
பிரிவை ஏங்கித் தவிக்கும் அப்பா, அம்மா

திரு. க. நடராஜா.

ஞானசம்பந்த வீதி,
வட்டுக்கோட்டை. (36974)

---

யாழ். மாவட்ட

## வெதுப்பக உரிமையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

12-06-95 இல் எமது செயற்குழு உறுப்பினர்கள், தமிழீழ அரசியல் பொறுப்பாளருடனும், தமிழீழ நிர்வாக சேவையுடனும் கலந்துரையாடிய போது, வெதுப்பியின் விலையை இன்னும் மூன்று தினங்களில் மறுபரிசீலனை செய்வதாக உறுதியளிக்கப்பட்டது.

ஆகவே தயவுசெய்து 12-06-95 இல் அறிக்கை விட்டது போன்ற எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காது ஒத்துழைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

(சி/1484)

த. சிவசுப்பிரமணியம்
மாவட்ட தலைவர்

---

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

அபிவிருத்திச் சங்கம்

## ஆண்டுப் பொதுக்கூட்டம்

காலம்: 25 - 06 - 1995 ஞாயிறு
மு ப. 10-00 மணி

இடம்: யாழ். இந்துக் கல்லூரி
குமாரசுவாமி மண்டபம்

தலைவர்: திரு. அ. பஞ்சலிங்கம்
அதிபர்

பெற்றோர் அனைவரும் சமுகமளிக்கும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

அ. பஞ்சலிங்கம்
அதிபர்

ச. சத்தியசீலன்
செயலாளர்
[சி/1485]

---

## ★ தேவா ★

## முறிவு நெரிவு சிகிச்சை நிலையம்

சகல வித நோவு, முறிவு, சுளுக்கு,
தசை நெரிவுகளுக்கும் புக்கை கட்டும் இடம்

செ. தேவராஜா,
உரிமையாளர்,

3ஆம் குறுக்குத்தெரு, பாஷையூர்
யாழ்ப்பாணம். [37057]

---

உ
கோண்டாவில் வடக்கு,
அருள்மிகு தில்லைக்காளி அம்பிகை
தேவஸ்தானம்

## பூங்காவன உற்சவமும் பாராட்டு விழாவும்

இன்று (13 - 6 - 95) செவ்வாய்க்கிழமை அம்பிகைக்கு பூங்காவன விழா செய்ய திருவருள் கூடியிருக்கும் சமயத்தில்,

சிவத்திரு வ. குமாரசாமி ஐயர்
(பிரபல இசைச் சொற்பொழிவாளர்)
அவர்கள் 02 - 06 - 95 — 11 - 06 - 95 வரை
"அம்பிகையின் மகத்துவம்"

பற்றி தொடர் தெய்வீகப் பேருரை நிகழ்த்தியமைக்காக பிரபல இசைக் கலைமாமணி வீரமணி ஐயா அவர்களினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளார்.

— அறங்காவலர்

[37053]

---

## 3 ஆம் வருட நினைவஞ்சலி



மண்ணுறவு: 06 — 04 — 1917
விண்ணுறவு: 17 — 05 — 1992

அமரர்
**கார்த்திகேசு சபாரத்தினம்**
திதி: 13 — 06 — 1995

ஆண்டவன் அடி சேர்ந்து
ஆண்டு மூன்று கரைந்து விட்டதே ஐயா
துணையாகி நின்ற எம் தூண் சரிந்ததால்
துயரத்தில் மூழ்கி நித்தமும் கலங்குகிறோம் — ஐயா
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்,

அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

15 ஆம் கட்டை,
உடுப்பிட்டி. [36948]

---

## பாராட்டு விழாவும் விருது வழங்கலும்

கோண்டாவில் தில்லையம்பதி
**அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்**
வைகாசி மஹோற்சவ பெருவிழாவின் போது
03 — 06 — 1995 தொடக்கம் 12 — 06 — 1995 வரை
ஸ்ரீ சிவமகாபுராணம்
தொடர் தெய்வீகப் பேருரை
நிகழ்த்திய சிவநெறித் தொண்டன்



**செ. சத்தியமூர்த்தி**
(ஆசிரியர்) பி. எஸ் சி. அவர்களுக்கு
மேற்படி திருக்கோயிலில்
இன்று (3 — 06 — 95) இரவு 8.00 மணிக்கு
கவிமாமணி ந. வீரமணிஐயர்
அவர்களால்

## ★ தமிழ்மொழிநாவலன் ★

எனும் பட்டமும் விருதும் வழங்கி
கௌரவிக்கப்படவுள்ளது.

பிரதம விருந்தினர்:
கவிமாமணி ந, வீரமணிஐயர் அவர்கள்
சிறப்பு விருந்தினர்களாக
பின்வருவோர் கலந்து கொண்டு சிறப்புரை வழங்குவர்:
★ திருமதி கமலா சிவசிதம்பரம் அவர்கள்
(நல்லூர் பிரதேச செயலர்)
★ கலாநிதி நா சுப்பிரமணியன்
(முதுநிலை விரிவுரையாளர்)

[37058] — பரிபாலன சபை.

---

31 ஆம் நாள்

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
**வேலாயுதபிள்ளை குருநாதன்**
(யாழ். மாநகரசபை பிரதம மின்மாணி வாசிப்பாளர்)

மண்ணிடை மலர்வு: 22 — 12 — 1924
விண்ணிடை குவிவு: 14 — 05 — 1995

திதி: 13 — 06 — 1995

எங்கள் குடும்பத் தலைவரின் மறைவை அறிந்து ஈமச்சடங்குகளில் கலந்தும் அனுதாபச் செய்திகள், மலர்வளையங்கள் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்கான அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

கலைவாணி மில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (37059)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## ஒரே ஆட்சியில் வாழ்வதெப்படி?

கிழக்குப் பிரதேசத்தில் மிதிவெடிகள், கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக, அங்குள்ள படையினர், தமிழ்ப் பொதுமக்களைக் கேடயங்களாகப் பயன்படுத்துவதாக நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் படையினர் மீது தாக்குதல் எதனையும் நடத்தி, இராணுவத் தரப்பில் இழப்பு உண்டாகி விட்டால், அதற்குப் பழிக்குப் பழி வாங்குவது தமிழ்ப் பொதுமக்களையே. சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு அருகில் வாழும் தமிழ்மக்களை கேட்டுக் கேள்வி இன்றிச் சுட்டுத்தள்ளிவிட்டே படையினர் அடுத்த அலுவல் பார்ப்பது உண்டு.

இதனால் இராணுவ ஆதிக்கத்துக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் தமிழ்ப் பொதுமக்களின் பாதுகாப்பு எப்போதும் சந்தேக நிலையிலேயே உள்ளது. இப்போது கிழக்கில் வாழும் தமிழர்களின் வாழ்க்கையும் உயிரும் ஸ்ரீலங்கா அரச படையினரின் தயவில் தங்கியுள்ள அவல நிலை நிலவுகிறது.

இது தமிழ் மக்களின் வாழ்வுரிமையை மறுக்கும் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். நிராயுத பாணிகளான அப்பாவித் தமிழ் மக்களைக் கொல்லும் படையினர் எந்த விதத்திலும் தண்டிக்கப்படுவதில்லை. கொலைச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தப்படுவதும் இல்லை.

தமிழ்ப் பொதுமக்களைக் கொன்று விட்டு, விடுதலைப் புலிகள் இத்தனை பேர் மோதலின் போது அல்லது எதிர்த்தாக்குதலின் போது கொல்லப்பட்டனர் என்று கணக்குக் கொடுப்பதோடு எல்லாம் சரியாகி விடுகிறது.

மீண்டும் அதே போன்று தமிழர் கொலைகளைச் செய்வதற்குப் படையினர் தயாராகின்றனர். இதுவே வடக்கு - கிழக்கில் அரசாங்கம் நடத்தும் போரின் பிரதான அங்கமாக அரங்கேறி வருகிறது.

இதிலும் திருப்தி கொள்ளாத இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின் போது தமிழ்ப் பொதுமக்களைக் கேடயமாக்கி அவர்களைப் பலி எடுப்பதும் உண்டு.

மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புள்ளவர்கள் படையினர். ஆனால் ஸ்ரீலங்கா படைகளைப் பொறுத்த வரையில் அவர்களுக்குத் தமிழ் மக்கள் "பாதுகாப்பு" வழங்க வேண்டியுள்ளது. இந்த வரிசையைச் சேர்ந்ததே கண்ணிவெடி, மிதிவெடிகளை அகற்றச் செல்லும் படையினர் தமிழ்ப் பொதுமக்களைக் கேடயமாகப் பயன்படுத்தும் அநியாயமும் ஆகும். இராணுவ முகாம்களுக்குப் பாதுகாப்பாக அவற்றுக்கு முன்னால் தமிழர்களை பலவந்தமாகக் குடியேற்றுவது இன்னொரு "பாதுகாப்பு"

தமிழ்ப் பொதுமக்கள் படையினரால் இவ்வாறு அநியாயமாகப் பலி கொள்ளப்படுவது குறித்து அரசாங்கமும், ஏனைய சிங்கள அரசியல் வாதிகளும் எந்த வகையிலும் எள்ளளவும் கவலைப்படுவதில்லை. அதனைக் கணக்கில் எடுத்துக் கருத்து வெளியிடுவதும் இல்லை.

ஆனால் சிங்களப் பொதுமக்கள் ஆடியில் ஒருமுறை அமாவாசையில் ஒருமுறை என்று கொலையுண்டு விட்டால், அதனை வன்மையாகக் கண்டிப்பது மட்டுமன்றி அதற்குப் பதிலடியாக தமிழ் மக்களுக்கு எதிரான வன்செயல்களை தூண்டி விடவும் செய்கின்றனர்.

தமிழர்கள் சிறுபான்மையினர் — அவர்களில் எத்தனை பேரும் எப்படியும் சாகலாம்; சிங்களவர்கள் பெரும்பான்மையினர் — அவர்களில் ஒருவர் மாண்டாலும் அதற்குப் பதிலாக பத்துத் தமிழர்கள் கொல்லப்பட வேண்டும் என்ற மனப்போக்கே சிங்கள அரசியல் வாதிகளிடமும், பேரினவாதிகளிடமும் நிலவுகிறது.

திப்புலாகல தேரர் கொலையும், அதற்குப் பதிலான காலி வன்செயலும் இதற்கு சமீபத்திய உதாரணம்.

இந்தப் பின்னணியில் சிங்களவரும், தமிழர்களும் சேர்ந்து வாழலாம்; ஒரே ஆட்சியின் கீழ் வாழலாம் என்று கருதுவதனை விட மடமை வேறு எதுவும் இருக்க முடியாது!

---

வடக்கே செல்ல அரசு அனுமதி வழங்கிவிட்டபோதும்

# துறைமுகத்துக்குள் பிரவேசிக்க முடியாத நிலையில் கப்பல்கள் காத்து நிற்கின்றன!

## துறைமுக அதிகார சபையினர் அசமந்தப் போக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 13

வடக்குக்கு தனியாரின் பொருள்களை எடுத்து வர இருகப்பல்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளபோதும்—

துறைமுக அதிகார சபையின் அதிகாரிகளின் அசமந்தப் போக்கால் அவ்விரு கப்பல்களும் இரு வாரங்களாக கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே தவம் கிடப்பதாக கொழும்பு தகவல் ஒன்று தெரிவித்தது.

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் மற்றும் ப. நோ. கூ. சங்கங்கள் ஆகியவற்றுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல 'குமண' கப்பலுக்கும்—

உரம் மற்றும் மண்ணெண்ணெயை எடுத்துச் செல்ல 'மாஹோ' கப்பலுக்கும்— அரசு அனுமதி வழங்கி உள்ளது.

இக் கப்பல்களில் ஏற்றுவதற்காக பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை கொள்வனவு செய்த தனியார் முதலாளிகள் மற்றும் ப. நோ. கூ. சங்கத்தினர் பொருள்களை கப்பல்களில் ஏற்றுவதற்கு கொழும்பில் காத்து நிற்கிறார்கள்.

ஆனால் இந்தக் கப்பல்களை கொழும்புத் துறைமுகத்துக்குள் அனுமதிக்க துறைமுக அதிகார சபை அதிகாரிகள் பின்னடித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விரு கப்பல்களுக்கும் அனுமதி மறுத்துள்ள துறைமுக அதிகாரிகள் புனர் வாழ்வு அமைச்சின் கப்பலான 'லங்கா முதித' வை மட்டும் துறைமுகத்துக்குள் அனுமதித்துள்ளதாக தெரியவந்தது.

கப்பல்கள் வடக்கே செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளதாக பகிரங்கமாக அரசு கூறிவிட்டு, வடக்கே உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவதை மறைமுகமாக அரசு தடுக்கிறதா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. [ஒ-3]

## எழுதுவினைஞர்கள் தெரிவு போட்டிப் பரீட்சை 17இல்

### யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜூன் 13

எழுதுவினைஞர் சேவைக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற இருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் 51 நிலையங்களில் நடைபெறும் இப்பரீட்சையில் சுமார் 7 ஆயிரம் பேர் தோற்றுகின்றனர்.

இப்பரீட்சையில் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் நேற்று இங்கு எடுத்துவரப்பட்டன.

பரீட்சைக்கான வினாப்பத்திரங்கள் இன்று யாழ்ப்பாணம் எடுத்து வரப்படும் என நேற்று தகவல் கிடைத்தது. (ஒ-3)

## அம்பாறையில் படையினால் தமிழர் சுட்டுக் கொலை!

### சகோதரர் கைது செய்யப்பட்டார்

யாழ்ப்பாணம், ஜூன் 13

அம்பாறையில் பொத்துவில் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை அப்பாவி தமிழ் இளைஞன் ஒருவரைச் சுட்டுக் கொன்ற பொலிஸ் அதிரடிப் படையினர், விடுதலைப் புலிகளே அவ்விளைஞனை சுட்டுக் கொன்றதாக அப்பகுதி மக்களுக்கு கூறியுள்ளதாக "புலிகளின் குரல்" அறிவித்தது.

அன்று அதிகாலை 2 மணியளவில் பொத்துவில் பகுதியை சுற்றிவளைத்த அதிரடிப்படையினர் 18 வயதான கிருஷ்ணன் என்ற இளைஞனை சுட்டுக்கொன்றுவிட்டு, அவரின் சகோதரனை கைது செய்து முகாம் கொண்டு சென்றனர்.

இச்சம்பவத்தை பலர் நேரில் பார்த்துள்ளனர்.

பிடித்துச் சென்ற இளைஞனை விடுவிக்குமாறு பொலிஸ் அதிரடிப் படையினர் முகாமுக்கு அவரது உறவினர்கள் சென்றபோது விடுதலைப் புலிகளே பிடித்துச் சென்றதாகவும்—

அவர்களாலேயே சகோதரன் கொல்லப்பட்டதாகவும்— கூறப்பட்டதாம். (உ-3)

## நேபாள நாடாளுமன்றை கலைக்க பிரதமர் சிபார்சு

### எதிர்க்கட்சிகள் கூட்டாக ஆட்சேபம்

நேபாள நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுமாறு மன்னர் பிரேந்திராவைத் தான் கேட்டிருப்பதாக நேபாளப் பிரதமர் மன்மோகன் அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

அடுத்த 6 மாதங்களில் புதிய தேர்தல்களை நடத்துமாறுதான் கேட்டிருப்பதாகவும் அவர் சொன்னார்.

நேபாளத்தின் முதலாவது கம்யூனிஸ்ட் அரசின் தலைவராக ஆறு மாதங்களுக்கு முன்னர்தான் மன்மோகன் அதிகாரி பதவியேற்றிருந்தார்.

தேர்தலை நடத்தும் கோரிக்கையை மன்னர் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்றும்—

மாற்று அரசாங்கம் ஒன்றை அமைக்கத் தமக்குத் சந்தர்ப்பம் தரவேண்டும் என்றும்— எதிர்க்கட்சியான நேபாள காங்கிரஸ் கட்சி மன்னரிடம் கேட்டிருக்கிறது.

மன்மோகன் அதிகாரியின் அரசாங்கத்தின் மீது இம்மாதம் 16 ஆம் திகதி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் கூட்டாக முன்னறிவித்தல் கொடுத்துள்ளன.

இவ்விவகாரம் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மன்னர் தமது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (அ-4)

## புலிகளின் குரல் வானொலியில்

13 06 1995
செவ்வாய் இரவு

★ 8-02 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள்
★ 8-20 — நலந்தானா! — முதற்சிகிச்சையின் அவசியம் பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஆலோசனை
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கருத்துக்களம்
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

14 — 06 — 1995
புதன் காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவையின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

13 — 06 — 1995
செவ்வாய் மாலை

★ 5-00 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக் கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — தமிழிசை
★ 5-30 — வானொலி மதியூகம்
★ 6-00 — சிந்தனைக்கு சில விநாடிகள்
★ 6-02 — இவ்வாரம் இவர்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — என்தெரிவு

## பாடநூல் கருத்தரங்குகள்

சாவகச்சேரி, ஜூன் 13

ஜி. சீ. ஈ. உயர்தரம் — 1995 மாணவர்களுக்கான பாடநூல் சிறப்புக் கருத்தரங்குகள் இன்று செவ்வாய்க்கிழமையும் நாளை புதன் கிழமையும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

இப்பாடநூல் கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் பொருளியல், தமிழ்மொழி, இந்து நாகரிகம் இந்துசமயம் ஆகிய விடயங்களில் கருத்துரை வழங்குவர். (ஒ-14-3)

## பண்ணிசை போட்டி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன். 13

இணுவில் திருநெறிய தமிழ் மறைக்கழகத்தின் பண்ணிசைப்போட்டி பரிசளிப்பும், திருஞானசம்பந்தர் குருபூசையும் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன.

பண்டிதர் நா. இராசையா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வலி.தெற்கு பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் சிறப்புரையும், இளவாலை மெய்கண்டான் வித்தியாலய அதிபர் சைவப் புலவர் அ. செல்லத்துரை "தமிழ் ஞானசம்பந்தன்" என்னும் தலைப்பில் சமயச் சொற்பொழிவையும் நிகழ்த்துவார். (ஒ-3)

## தலைமைத்துவ கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். றோட்டறிக்கழக உறுப்பினர்களுக்கான தலைமைத்துவக் கருத்தரங்கு எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை காலை 8-30 மணிமுதல் பிற்பகல் 1-30 மணி வரை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஒ-14)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன். 13

கைதடி அ. த. க. பாடசாலையின் கல்விக் கண்காட்சி நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

பிரதம விருந்தினராக தென்மராட்சி உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு இ. கணேசனும் சிறப்பு விருந்தினராக திரு. கி. பாப்பாவும் கலந்துகொள்வார்கள். (ஒ-14)

## தையல் பயிற்சி நிலையம்

வலிகாமம் தெற்கு, ஜூன் 13

அளவெட்டி தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஆதரவுடன் அப்பகுதியில் உள்ள படித்த யுவதிகளின் நன்மை கருதி தையல் பயிற்சி நிலையம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் திரு. நா. வேதநாயகன் தையல் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்தார்.

தையல் பயிற்சி நிலையத்தில் அளவெட்டியை சேர்ந்த நாற்பத்தைந்து பெண்கள் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர். (ஜ-152)

## முச்சக்கர வண்டிகள்

வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட ஒன்பது முச்சக்கர வண்டிகள் இம் மாதம் 7ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இவை இப்பிரதேசத்தில் உள்ள வறுமைக்கோட்டின்கீழ் உள்ள வலுவற்றவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது (க-117)

## அதிபர் ஆற்றிய அரும்பணிகளை மக்கள் மறக்கமாட்டார்கள்

### சேவைநலன் பாராட்டு விழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 13

"ஆசிரியராகப் பதவி வகித்த காலத்தில் அதிபர் திரு. இரத்தினராஜா மாணவர்களுக்கு மட்டும் அன்றி ஊர்காவற்றுறை மக்களுக்கும் அரும்பணி ஆற்றினார். அவருடைய பணிகளை ஊர்காவற்றுறை மக்கள் ஒரு போதும் மறக்கமாட்டார்கள்."

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபர் திரு. எஸ். ஏ. இரட்ணராஜாவுக்கு மேற்படி கல்லூரியின் ஆசிரியர், மாணவர்களால் அளிக்கப்பட்ட சேவைநலன் பாராட்டுவிழாவில் உரை நிகழ்த்திய ஆசிரியர் திரு. ஜே. இராசரத்தினம் இவ்வாறு கூறினார்.

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி [யாழ் / சென் ஜோன் அக்கடமி]யின் உப அதிபர் திரு. கே. இரத்தினசிங்கம் தலைமையில் திரு. இரத்தினராஜாவின் சேவைநலன் பாராட்டு விழா கடந்த 26ஆம் திகதி நடைபெற்றது.

ஆசிரியர் திரு. இராஜரட்ணம் மேலும் பேசும்போது கூறியதாவது:

அவரது தாய்மையான பணிகளே குருமார்கள் நடத்தும் பாடசாலை ஒன்றில் குருமாரல்லாத ஒருவர் அதிபராக இலங்கையில் முதல் தடவையாக பதவியேற்ற பெருமையை அவருக்கு அளித்தது. ஒரு கத்தோலிக்க மதத்தவராக இருந்தபோதும் கொத்தணி அதிபராக இந்துப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் பெரும் பணியாற்றியவர் எங்கள் அதிபர் திரு. இரட்ணராஜா இவ்வாறு அவர் பேசும்போது கூறினார்.

ஊர்காவற்றுறை கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. நா. தணிகாசலம் பேசும்போது கூறியதாவது,

உயர்ந்த அனுபவம், ஆளுமை, தலைமைப் பண்புகள் நிறைந்த அதிபரவர்கள் சிக்கல் நிறைந்த கல்விக் கோட்பாடுகளை நுட்பமாகக் கையாண்டு மாணவர்களின் எதிர்காலத்திற்கு வழிகாட்டியவர். தன்னுடைய திறமையினால் ஆசிரியர்கள் கடைப்பிடிக்க வேண்டிய [illegible] மனப்பான்மை, [illegible]கள் எவை என [illegible] ஆசிரியர்களுக்கு உணர்த்தியவர். இவ்வாறு அவர் கூறினார்.

திரு. வ. நிமலநாதன், பி. ஸ்ரனிஸ்லோஸ், ஜி. அல்பேட், ந. தர்மராஜா, தீவுப் பகுதி மாணவர் ஒன்றியப் பொறுப்பாளர் திரு. ஒப்பிலாமணி, திருமதி ஜே. வல்லிபுரம், செல்வி அன்ரனிற்றா ஜெனிற்றா உட்பட தீவுப் பகுதியின் கல்விப் புலத்தைச் சேர்ந்த பலர் பாராட்டுரை வழங்கினார்கள்.

ஊர்காவற்றுறை கொத்தணிப்பாடசாலைகளின் சார்பிலும், பாடசாலை மாணவர்களின் சார்பிலும் பரிசில்கள் வழங்கப்பட்டு மலர் மாலை சூடியும் திரு திருமதி இரட்ணராஜா ஆகியோர் கௌரவிக்கப்பட்டார்கள், வாழ்த்துப் பாக்களும் வழங்கப்பட்டது.

முன்னதாக புனித மரியாள் பேராலயத்தில் நன்றித் திருப்பலிப் பூசை நடைபெற்று, மாணவர்களாலும், பெற்றோர்கள், பிரமுகர்களாலும் அதிபர் திரு இரட்ணராஜா [illegible] பத்திற்கு ஊர்வலமாக [illegible]. [க-111]

## சத்திர சிகிச்சை நிபுணர்

எம். எஸ். எவ். குழுவைச் சேர்ந்த சத்திர சிகிச்சை விசேட வைத்தியர் திரு. யூலியோ பிறிஸ் மே 31ஆம் திகதி முதல் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடமையைப் பொறுப்பேற்று செயற்பட்டு வருகின்றார்.

தென் அமெரிக்காவின் கௌதமாலா என்னும் இடத்தைச் சேர்ந்த இவ்வைத்திய நிபுணரின் சேவை இம்மாதம் 31ஆம் திகதி வரையில் மட்டுமே கிடைக்குமென மேற்படி வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்தார். (க-14-135)

மாவட்டங்கள் தோறும்

## ஒய்வூதிய நலன் பேணும் நிறுவனங்கள் அமைக்குக!

"ஓய்வூதியர்களின் நலன் கருதி மாவட்டங்கள் தோறும் "ஓய்வூதிய நலன் புரி நிறுவனம்" நிறுவப்பட வேண்டும்"

மேற்கண்ட கோரிக்கையை யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கம் அரசுக்கு விடுத்துள்ளது.

யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் வருடாந்த அறிக்கையில் மேற்கண்ட விடயம் கோரிக்கை வலியுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் சில விடயங்கள் வருமாறு:

★ அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் போது ஓய்வூதியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்க வேண்டும்.

★ ஒய்வூதிய சம்பள முரண்பாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

★ ஒய்வூதியர்களுக்கு வைத்திய சிகிச்சை பெறுவதற்கு முன்னுரிமை வழங்க யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதே போல ஏனைய பிரதேச அரசாங்க மருத்துவ மனைகளுக்கும் இந்த முறையை விரைவில் செயற்படுத்த ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

இதற்கிடையில் —

யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

சங்கத்தின் தலைவர் திரு. சு. இ. சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் யாழ். செயலக ஓய்வூதியர் பிரிவுக் கணக்காளர் திரு கா. வீரசிங்கம், பிரதம விருந்தினராகவும், யாழ். செயலக பிரதம கணக்காளர் திரு. சு. சிவபாலன், மாநகரசபை ஆணையாளர் வே பொ. பாலசிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

வன்செயல் சம்பவங்களின் போது

## காணாமற்போனோர் பற்றி செயலகத்தில் பதிய முடியும்

வன்செயல் சம்பவங்களால் காணாமற் போனவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் காலம் கடந்த பதிவுகள் யாழ். செயலகத்தில் உள்ள மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலதிக மாவட்ட பதிவாளரும், காணிப் பதிவாளருமான திரு. என். சதாசிவஐயர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பான பதிவுகளை மேற்கொள்வதற்கு பிரதேசசெயலகங்களுக்கு அதிகாரம் வழங்கி அரசு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்த போதிலும்—

வடக்கு — கிழக்கு பகுதிகளில் பிரதேச செயலகங்கள் முழுமையாக செயற்படாத காரணத்தால் மாவட்ட பதிவாளரினாலேயே இந்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இதுவரை 172 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன என்றும்—

அவை தொடர்பான விசாரணைகள் விரைவில் ஆரம்பிக்கும் என்றும்— அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-3)

## பேரணியில் பங்குபற்றுக; இந்துக்களுக்கு அழைப்பு!

### தங்கம்மா அப்பாக்குட்டி அறைகூவல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

இந்துக் கோயில்கள் இராணுவத்தால் சேதமாக்கப்பட்டமை, இந்துக் கோயில்கள் மீது விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள், மேற்கொள்ளப்பட்டமை, இந்துக் கோயில்கள் பலவற்றில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டமை, இந்துக் கோயில்களுக்குச் சொந்தமான பல காணிகள் கட்டடங்கள் பறிமுதல் செய்யப்படுவது ஆகியவற்றை எதிர்த்து இந்து சமயப் பேரவையினரால் நடத்தப்படவுள்ள கண்டனப் பேரணியில் இந்துக்கள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும்.

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு குறிப்பிட்டார்.

நாளை மறுதினம் 15 ஆம் திகதி இந்துசமயப் பேரவை மேற்கொள்ளவுள்ள பேரணி பற்றிய பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை —

"மத சுதந்திரத்தைப் பாதுகாக்க நடைபெறும் பேரணி வெற்றிகரமாக நடைபெற சகலரும் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும்"

பேரணி குறித்து கடந்த 4ஆம் திகதி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

நல்லை ஆதீனத்தில் ஆதீன முதல்வர் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. (க-14-111)

## குழாய்க்கிணறு

தென்மராட்சி சமூக மேம்பாட்டு நிறுவனமும், அறவழி போராட்டக் குழுவும் இணைந்து மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் அமைத்த குழாய்க் கிணறு கடந்த 7ஆம் திகதி தென்மராட்சிக் கல்விக் கோட்டப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது (க-117)

திரும்பி வந்த அகதிகளுக்கு

## பிரச்சினை ஏதும் இருப்பின் தொடர்பு கொள்ளலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்று திரும்பி, வவுனியா அகதி முகாமில் தங்கியிருந்து, பின் யாழ்ப்பாணம் திரும்பியவர்கள் தமக்கு ஏதாவது பிரச்சினைகள் இருந்தால் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அகதிகளுக்கான ஐ நா. அகதிகள் வவுனியா அலுவலக பிரதிப் பொறுப்பதிகாரி ஆர் எஸ். சி. ரஞ்சன் கேட்டுள்ளார்.

பதில் கடமை ஏற்று இங்கு வந்துள்ள இவர் இந்த அமைப்பின் யாழ் அலுவலகத்தில் பணியாற்றுகிறார். (ஒ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயங்களில்

ஆவைக்கோட்டை ஸ்ரீ முத்த நயினார் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை இரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஒ-14)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு இலந்தைக்குளம் மன்றுளாடும் பிள்ளையார் ஆலய பூங்காவனத்திருவிழா இன்று நடைபெறுகிறது.

அதனையொட்டி பி. ப. 5 மணிக்கு செஞ்சொற் கொண்டல் ஆறு. திருமுருகனின் தெய்வீகப் பேருரையும், நாதஸ்வர வித்துவான் ரஜீந்திரன்-வாசஸ்பதி தம்பதிகளின் இன்னிசைக் கச்சேரியும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெற உள்ளன. (அ)

## விளையாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 13

காங்கேசன்துறை யங்றோயல் விளையாட்டுக் கழகம் உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 2-30மணி: தெல்லிப்பளை விநாயகர் அணி எதிர் அளவெட்டி விநாயகர் 'பி' அணி.

★ 4-30மணி: பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணி எதிர் சுழிபுரம் சத்தியா வி.க. அணி.

★ 4-30மணி: நாவாந்துறை கலைவாணி அணி எதிர் பன்னாலை கணேசன் அணி.

★ ★ ★

''உதயன்'' வெற்றிக் கிண்ணத்துக்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும்-எழு பேர் கொண்ட

## நிகழ்வுகள்

அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் பருத்தித்துறை திக்கம் முனையில் உள்ள கழக மைதானத்தில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி — கலட்டி ஐ.வி. கழக அணி எதிர் பருத்தித்துறை ஐ.வி. கழக அணி.

★ 4.45 மணி — அளவெட்டி இளைஞர் அணி எதிர் கொக்குவில் பொற்பதி ''ஏ'' அணி. (ஐ-3)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகம் நடத்தும் ஆண்களுக்கான தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 4 மணி — பூமகள் ''பி'' அணி எதிர் ஆனந்தா அணி.

★ 5 மணி — கலாஜோதி அணி எதிர் நாவலர் அணி. (ஐ-3)

## சம்பந்தர் குருபூசை நிகழ்ச்சிகள்

நாவலர் ஆச்சிரம மண்டபத்தில், சைவபரிபாலன சபை ஒழுங்கு செய்துள்ள திருஞானசம்பந்தர் குருபூசை, இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும். (ஐ-14)

★ ★ ★

வண்ணார்பண்ணை சிலகுருநாதர் வீதி மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திருஞான சம்பந்தர் குருபூசை நிகழ்ச்சி நடைபெறும். (ஐ-14)

★ ★ ★

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை திருஞான சம்பந்தர் குருபூசை நடைபெறும்.

★ ★ ★

அகில இலங்கை திருமுறை மன்றத்தினர் ஏற்பாடு செய்துள்ள திருஞானசம்பந்தர் குருபூசை நிகழ்ச்சி இன்று நல்லூர் சட்டநாதர் ஆலயத்தில் நடைபெறும்.

## உலக உலா வெளிவந்தது

யாழ்ப்பாணம், ஜூன் 13

உலகச் செய்திகள் மற்றும் அறிவியல் விடயங்களைத் தாங்கி வெளிவரும் ''உலக உலா'' சஞ்சிகையின் இம் மாத இதழ் வெளிவந்துள்ளது.

பறக்கும் தட்டு உண்மையானதா? அல்லது முற்றிலும் கட்டுக்கதையா? என்ற தலைப்பிலான விரிவான ஆய்வுக் கட்டுரையை பிரதான அம்சமாகக் கொண்டு இம் மாத இதழ் வெளிவந்துள்ளது. (ஐ)

## நினைவு பூங்கா புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

பராமரிப்பும், பாவனையும் அற்று இருந்த குருநகர் தேவதாஸ் நினைவுப் பூங்கா மீண்டும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

புனரமைக்கப்பட்ட பூங்காவை சிறுவர்களின் பாவனைக்கு விடும் நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு குருநகர் தொடர் மாடிக்கு அருகே நடைபெறும். (ஐ)

### அனுமதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி அட்டைகளை அந்தந்தப் பகுதி உபதபால் அலுவலகங்கள் ஊடாக விநியோகிக்க விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக யாழ். பிரதம தபால் அதிபர் திரு.சு. சோமஸ்வரன் தெரிவித்தார்.

கிளாலி ஊடாக நேற்று இங்குஎடுத்துவரப்பட்ட அனுமதி அட்டைகள் உடனேயே தபாலில் சேர்க்கப்பட்டன.

(மற்றொரு செய்தி மூன்றாம் பக்கத்தில்) (ஐ)

### துறைமுகத்துக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லாம் என்றும் — செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இன்று காலை இக் கப்பல் பருத்தித்துறைக்கு வந்து பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த வாரம் ஸ்டான்ஸர் கப்பல் காங்கேசன்துறையில் கண்ணியில் சிக்கி சேதமடைந்து மூழ்கிய பின்னர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழுவின் [illegible] இக் கப்பல் முதன் [illegible] காங்கேசன்து[illegible] குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## ★ புலிகள் தாக்கலாம் என்று அச்சம்

# ஐயாயிரம் பொலீஸார் மிகிந்தலையில் குவிப்பு!

வடமத்திய மாகாணத்தில் உள்ள மிகிந்தலையில் நடைபெறும் பொசன் நிகழ்வில் கலந்து கொள்ளும் பௌத்த யாத்திரிகர்களின் பாதுகாப்புக்காக சுமார் ஐயாயிரம் பொலீஸார் நேற்று அப்பகுதியில் குவிக்கப்பட்டனர்.

சமய நிகழ்வில் கலந்து கொள்ளும் யாத்திரிகர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்று தெரிவிக்கப்பட்ட அச்சத்தை அடுத்தே மிகிந்தலையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டனவாம்.

எனினும் வழமையை விட குறைந்த எண்ணிக்கையான பௌத்த யாத்திரிகர்களே நேற்றைய ''பொசன்'' சமய நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

திம்புலாகல விஹாராதிபதி சிலாலங்கார தேரர் கடந்த மாதம் சுட்டுக்கொலைப்பட்ட சம்பவத்தின் பின்னர் மிகிந்தலையில் உள்ள பௌத்த பிக்குகள் மத்தியில் தமது பாதுகாப்புக் குறித்து அச்சம் நிலவுவதாக ''வெரித்தாஸ்'' வானொலி தெரிவித்தது.

## சாயமுற்றவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

கல்வியங்காடு பிரதானவீதியில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வாகன — சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து சுயநினைவு இழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குட் படுத்தப்பட்டிருந்த ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

சைக்கிளில் சென்றவரான கல்வியங்காட்டை சேர்ந்த நித்தியசிவம் கௌரிபாலன் என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (ஒ-15)

## சிரமதானம்

சாவகச்சேரி மட்டுவில் சந்திரபுர கந்தவசோதய மகா வித்தியாலயத்தில் கடந்த மே 21 ஆம் திகதி வட இலங்கைச் சர்வோதயத்தின் தென்மராட்சிப் பிரிவினரால் சிரமதானப்பணி பிரதேச இணைப்பாளர் திருமதி ரவிலா தலைமையில் நடைபெற்றது. இச் சிரமதானப்பணியில் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர் இச்சிரமதானப்பணி மாதம் ஒரு தடவை மேற்படி பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. என பாடசாலை அதிபர் மு. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார். (க-31)

# வடக்கில் பெரும் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் தயாராகின்றனர்

### செய்தி ஏஜென்ஸிகள் தகவல்

கொழும்பு, ஜூன் 13

வடக்கில் பெரும் தாக்குதல் ஒன்றுக்கு விடுதலைப்புலிகள் தயாராகி வருகின்றனர் என்று கொழும்புத் தகவல்களை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

போர் இடைநிறுத்தம் முறிவடைந்த பின்னர் சுமார் 4 ஆயிரம் போராளிகளை புலிகள் புதிதாகத் தமது இயக்கத்தில் சேர்த்துள்ளனர் என்றும் —

புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு போர் பயிற்சி வழங்கப்படுவதாகவும் ''ராய்ட்டர்'' செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் உள்ள படை முகாம்களைக் கைப்பற்ற விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-4]

### படை நடவடிக்கைக்கு சூட்டப்பட்ட

## ''ராம சக்தி'' என்ற பெயர் ஏற்படுத்தியுள்ள குழப்பம்

கொழும்பு, ஜூன் 13

திருமலை காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளைத் தேடி அழிக்கும் பாரிய நடவடிக்கையை படையினர் அண்மையில் மேற்கொண்டிருந்தனர். அந்தப் படை நடவடிக்கைக்கு ''ராம சக்தி — 3'' எனப் பெயரிடப்பட்டிருந்தது.

அவ்வாறு பெயரிட்டது யார் என்பது தொடர்பாக பாதுகாப்பு வட்டாரங்களில் குழப்ப நிலை ஏற்பட்டிருப்பதாக கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பிட்ட பெயரை வழங்கியவர் யார் என்பது பற்றி தமக்கு எதுவும் தெரியாது என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வாவும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையும் தெரிவித்ததை அடுத்தே பெயர் தொடர்பான குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. [ஐ-4]

## நினைவுக்கல் நாட்டல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

கடந்த 2ஆம் திகதி திரியாய் காட்டுப் பகுதியில் யான்ஓயா என்ற இடத்தில் நடந்த மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை இளையவனின் (அல்விராசா கமலதாஸ் — நவாலி தெற்கு, மானிப்பாய்) இறுதி வீரவணக்கக் கூட்டமும், நினைவுக்கல் நாட்டலும் இன்று நடைபெறவுள்ளன.

பிற்பகல் ஒரு மணியளவில் உருவப்படம் அவரது இல்லத்தில் இருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இறுதி வீரவணக்கத்துக்காக வைக்கப்படும். பிற்பகல் 2 மணியளவில் அங்கு வீரவணக்கக் கூட்டம் நடைபெறும்.

பின்னர் உருவப்படம் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி இராணுவ மரியாதையுடன் அங்கு நினைவுக்கல் நடப்படும். (ஐ)

### மட்டக்களப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஏறாவூரைச் சேர்ந்த மகேந்திரன் (வயது 22) என்ற இளைஞரே கொல்லப்பட்டவராவார்.

காஞ்சிரன்குடா பகுதியில் நடைபெற்ற இன்னொரு சம்பவத்தில் ரோந்து சென்ற படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நல்லதம்பி குஞ்சுப்பிள்ளை [வயது 17 — முனைக்காடு], பாலிப்போடி மணி [வயது 25] ஆகிய இரு தமிழர்கள் உயிரிழந்தனர். (ஐ-4)

### விபத்துக்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எப்போது குண்டு வெடிக்கும் என்ற எண்ணம் பொது மக்கள் மத்தியில் பீதியை கிளப்பி விட்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ)

### அடுத்தடுத்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இதனால் மக்கள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து காணப்படுகிறது.

தலைநகரின் வர்த்தக நிலையங்கள் வழமையான களையை இழந்து காணப்படுவதாகவும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கையில் பெரும் வீழ்ச்சி காணப்படுவதாகவும் வர்த்தக வட்டாரங்கள் கூறின.

வெளி மாவட்டங்களில் மொத்த வியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் கொழும்புக்கு வந்தே தமக்குத் தேவையான பொருள்களை வாங்கி வாகனங்கள் மூலம் எடுத்துச் செல்வது வழக்கம் என்றும் —

ஆனால் இப்போது குண்டு வெடிப்புகளுக்கு அஞ்சி கொழும்பு வருவதற்கு அவர்கள் தயக்கம் காட்டுகின்றனர் என்றும் —

கொழும்பு நகருக்குள் வரும் வாகனங்கள் தீவிரமாகப் பல இடங்களிலும் சோதிக்கப்படுவதால் தமது சொந்த வாகனங்களை (குறிப்பாக லொறிகளை) எடுத்துவர பின்நிற்கிறார்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

சாதாரண பாவனையாளர்களும், மொத்த, சில்லறை வியாபாரிகளும் கொழும்பு வருவதற்கு அஞ்சுவதால் தலைநகரில் வர்த்தகம் மந்த நிலைக்கு வந்திருப்பதாகவும் —

கடந்த ஒரு வாரத்தில் நிலைமை இந்தளவு மோசமான நிலைக்குச் செல்லும் என்று எதிர்பார்க்கவில்லை என்றும் —

குண்டு வெடிப்புகள் மேலும் தொடருமாயின் நிலைமை மிக மோசமடையும் என்றும் —

வர்த்தகத் துறையினர் மட்டுமன்றி பாவனையாளர்களும் பொருள்கள் கிடைக்காமல் கஷ்டப்பட நேரிடக்கூடும் — என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் விவரித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. (அ-3)


ஊருக்குள் அறியாத முகமென்றால்
உன்னித்துப் பார்!
அறிந்த முகத்தையும்
அலட்சியம் செய்யாதே!!
வேருக்குட் கறையான் புகுந்தால்,
விழுதுவிட்ட மரமும் விழும்.
[illegible]
வருபவனை அளவிடு!!!


# புலிகளின் ஏவுகணைகள் இந்தியாவுக்கு பாதிப்பு!

### முரளி மனோகர் ஜோஷி தெரிவிப்பு

சென்னை, ஜூன் 13

விடுதலைப் புலிகள் ஏவுகணைகளை வைத்திருப்பது இந்தியாவின் எல்லைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்தியாவின் முக்கிய எதிர்கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் முன்னாள் தலைவர் டாக்டர் முரளி, மனோகர், ஜோஷி முன்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழகத்துக்கு விஜயம் செய்துள்ள டாக்டர் ஜோஷி அங்கு நேற்று செய்தியாளர் மத்தியில் உரையாற்றினார்.

விடுதலைப் புலிகள் தம்வசம் ஏவுகணைகளை வைத்திருப்பது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்காதா என்று அவரிடம் செய்தியாளர்கள் கேட்டதற்கு அவர் இவ்வாறு பதிலளித்தார். (ஐ-4)

# தேர்தலில் வாக்களிக்க அடையாள அட்டை அவசியம்

கொழும்பு, ஜூன் 13

தேர்தல் இடாப்பில் பெயர்களை பதிவு செய்வதற்கும் தேர்தலில் வாக்களிப்பதற்கும் தேசிய அடையாள அட்டையை வைத்திருத்தல் கட்டாயமாக்கப்பட உள்ளது.

அமைச்சரவை இது சம்பந்தமாக எடுத்திருக்கும் தீர்மானத்திற்கு அமைய புதிய சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட இருக்கின்றது.

அடுத்த ஆண்டில் இருந்து தேசிய அடையாள அட்டை வைத்திருப்போர் மட்டுமே தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்று தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

இவ்விதம் செய்வதன் மூலம் தேர்தல்களை நியாயமாகவும் பிரச்சினைகள் இன்றியும் நடத்தக் கூடியதாக இருக்கும் என்று அவர் கூறிவார். (ஐ-4)

### யாழ். ஆஸ்பத்திரியில்

# கிருமி அகற்றும் பிரிவு முற்றாகச் செயலிழந்தது

யாழ்ப்பாணம், ஜூன். 13

யாழ். ஆஸ்பத்திரி கிருமி அகற்றும் பிரிவு நேற்று முதல் முற்றாக செயலிழந்து விட்டதால் சிகிச்சைகளில் பெரும் பாதிப்புக்கள் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

நோயாளரின் சிகிச்சைச் சேவையில் முக்கிய பங்கு வகிக்கும் இப்பிரிவு செயலிழந்துள்ளதால் சிகிச்சைகளுக்கு அத்தியாவசியமான பாவனைப் பொருள்கள் உபகரணங்கள் கிருமி அகற்ற முடியாத அபாய நிலை உருவாகியுள்ளது.

இப்பிரிவில் இயங்கிவந்த இரண்டு கிருமி அகற்றும் இயந்திரங்களில் ஒன்று கடந்த ஒருமாதத்திற்கு முன்பு பழுதடைந்து திருத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் தற்போது இயங்கி வந்த ஒரே ஒரு கிருமிஅகற்றும் இயந்திரமும் நேற்று முற்றாகச் செயலிழந்துள்ளதால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை தவிர்க்கு முகமாக ஆஸ்பத்திரி நிர்வாகம், இயந்திரத்தைப் பழுதுபார்ப்பதற்கான அவசர முயற்சிகளை உடனடியாகவே மேற் கொண்டிருந்தது. (ஒ-16)

# 10 ஆண்டுகளுக்கு மேல் முத்திரையிடா அளவைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ் நகர் பகுதியில் உள்ள கடைகள் பலவற்றில் 10 வருடங்களுக்கு மேலாக முத்திரையிடப்படாத நிலையில் நிறுத்தல் அளவை உபகரணங்கள் பாவித்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

யாழ் செயலக நிறுத்தல் அளவைகள் பொறுப்பதிகாரி திரு. கே. நாகலிங்கம் தலைமையில் யாழ் நகர் கடைகளில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்ட பரிசோதகர் குழு இவற்றைக் கண்டுபிடித்துள்ளது.

இந்த உபகரணங்கள் யாவும் 1980 ஆம் ஆண்டு முதல் 1990ஆம் ஆண்டுவரையே முத்திரையிடப்பட்டுள்ளனவாக காணப்பட்டன.

யாழ். ஆஸ்பத்திரி வீதி, யாழ். நகர் மரக்கறிச் சந்தைப் பகுதியில் உள்ள கடைகளிலே கைப்பற்றப்பட்ட இந்த உபகரணங்கள் மேல் நடவடிக்கைக்காக யாழ். செயலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. (க-4)

## அன்பளிப்பு

யுனிசெப் நிறுவனத்தினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள ஆயிரத்து 380 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணப் பொதிகளை தமிழர் புனர் வாழ்வுக் கழக தென்மராட்சிப் பிரிவினர் மூலம் அண்மையில் வழங்கினர்.

### படைகளுக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை இராணுவ தொண்டர்படை அதிகாரிகளுக்கான விண்ணப்பங்களையும் அரசு இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் கோரியுள்ளது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக தொண்டர் படையணிகளுக்கு அரசு ஆட்களைச் சேர்க்கவுள்ளது.

தற்பொழுது 30 ஆயிரம் தொண்டர் படையினர் வடக்கு - கிழக்கு போர் நிலைகளில் நிறுத்தப்பட்டுள்ளனர். (ஐ-4)

## இணுவில் கந்தசாமி கோயில் திருமஞ்சத் திருவிழா

காலம்: நாளை (14 — 06 — 95) புதன்கிழமை

காலை சண்முகப் பெருமானுக்கு ஆயிரத்தெட்டு (1008) சங்காபிஷேகம் நடைபெறும்.

மாலை 3-00 மணிக்கு விஷேட மேளக்கச்சேரி ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து எம்பெருமானுக்கு சண்முக அர்ச்சனை நடைபெற்று மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் எம் பெருமான் வீதி உலா வரும் காட்சியும் நடைபெறும். அவ்வேளை எம் பெருமானின் அருட் காட்சியைக் கண்டு அருளைப் பெற்றுய்யும் வண்ணம் அழைக்கின்றோம்.

குறிப்பு:

திருமஞ்ச உலா பி.ப. 7-00 மணிக்கு நடைபெறும்.

இங்ஙனம்,

— தர்மகர்த்தாசபை

(37055)

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் விக்கிரமசிங்கம்

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் [அம்ப உடையார்], மகன் விக்கிரமசிங்கம் [மாதகல் பாணாவெட்டி அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயம், தர்மகர்த்தா] அவர்கள் 8-6-95இல் கொழும்பில் சிவபதமடைந்தார்கள். இவர் சங்கரத்தை முறிவு நெரிவு வைத்தியர் காலஞ்சென்ற அம்பலவாணரின் சகோதரரும், விக்கிரமசிங்கம் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கமலாதேவி, சறோசினிதேவி ஆகியோரின் தகப்பனாரும் ஆவார். இவரின் ஈமக் கிரியைகள் 9-6-95 அன்று கொழும்பில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:

வி. இராசரத்தினம் (மைத்துனர்)

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.

(8584)

### சின்னப்பு, சிதம்பரநாதர்

(நொத்தாரிஸ், லிகிதர்)

வரணி இயற்றாலையை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு. சிதம்பரநாதர் 12-6-95 திங்கள் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதியார் சின்னப்பு கந்தாத்தைப்பிள்ளை, தம்பதிகளின் புதல்வனும் கொடிகாமம் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, கதிரவேற்பிள்ளை, திருமதி பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற ஆறுமுகம், காலஞ்சென்ற முருகர், பாறிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் வள்ளிநாயகியின் அன்புக் கணவனும் சிவஞானவதி, ஏகாம்பரநாதன், சிவமலர் சிவராசமலர் சிவராமலிங்கம், சிவரஞ்சிதமலர், சிவாஜினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கந்தசாமி, சோதிமலர் ஆகியோரின் மருமகனும் அமிர்தாப்பின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-6-95) செவ்வாய்க்கிழமை பி. ப. 2 மணியளவில் நடைபெற்று குடமியன் இந்துமயானத்தில் தகனக் கிரியை நடைபெறும், இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

சி. ஏகாம்பரநாதன் (மகன்)

வரணி, இயற்றாலை,
வரணி.

(37060)

### நித்தியசிவம் கௌரிபாலன்

[கௌரி]

நித்தியசிவம் கௌரிபாலன் 12-06-95இல் அகாலமரணமானார்.

இவர் நித்தியசிவம், மணிமேகலாதேவி ஆகியோரின் அன்பு மகனும் இந்திராகாந்தியின் அன்புக் கணவரும், சங்காயோகன், அகிர்ராஜ் ஆகியோரின் அருமைத் தந்தையும், நிரஞ்சனன், கமலாசினி இரவீந்திரன், ஆனந்தகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகேந்திரன் (பிரான்ஸ்), சசிகலா ஆகியோரின் மைத்துனரும், சோமசுந்தரத்தின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 3ஆம் கட்டைவடி பருத்தித்துறை வீதி, கல்வியன்காட்டில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று இன்று 13-06-95 முற்பகல் 10.00மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

தகவல்

சோ. நித்தியசிவப் (தந்தை)

[37061]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13 06 1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org